செ.வெ.எண்:496 நாள்: 02.08.2020

**இந்தியாவிலேயே அதிகபட்சமாக தமிழகத்தில் இதுவரை 26.77 லட்சம் நபர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளின் சிறப்பான சிகிச்சையால் இதுவரை 1.96 லட்சம் நபர்கள் கொரோனா தொற்றிலிருந்து பூரணகுணமடைந்துள்ளனர்.**

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்**

---

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (02.8.2020) இரவு புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசு தலைமை மருத்துவமனையினை ஆய்வு செய்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள், அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் திரு. இ.ஏ.இரத்தினசபாபதி அவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலுக்கிணங்க தமிழகம் முழுவதும் கொரோனா பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசு தலைமை மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

தற்பொழுது இம்மருத்துவமனையில் 59 நோயாளிகளுக்கு சிறந்த முறையில் கொரோனா சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளிடம் மருத்துவமனையில் அளிக்கப்பட்டு வரும் மருத்துவ சிகிச்சைகள் குறித்து கேட்டறியப்பட்டது. இங்கு சத்தான உணவுகள் மற்றும் சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக கொரோனா நோயாளிகள் நன்றி தெரிவித்தனர். இதற்காக இப்பணியில் உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் வாழ்த்துக்களை தொவித்துக்கொள்கிறேன்.

இம்மருத்துவமனையில் தற்பொழுது 70 படுக்கைகளுடன் கொரோனா சிகிச்சை மையம் செயல்பட்டு வருவதுடன் தேவைக்கேற்ப கூடுதல் படுக்கை வசதியும் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி, இலுப்பூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் கொரோனா சிகிச்சை பிரிவு செயல்பட்டு வருவதுடன் தற்பொழுது புதுக்கோட்டையில் புதிதாக 100 படுக்கைகள் கொண்ட சித்த மருத்துவப்பிரிவும் கொரோனா சிகிச்சைக்கு துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைகிணங்க தமிழகம் முழுவதும் கொரோனா நோயாளிகளுக்கு அரசு மருத்துவமனைகளில் சிறப்பான சிகிச்சை அளிக்கும் வகையில் தேவையான அளவு படுக்கை வசதிகள், ஆக்ஸினேசன் வசதி, உயிர் காக்கும் மருந்துகள், சத்தான உணவு போன்ற அனைத்து வசதிகளும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் இதுவரை அதிகபட்சமாக 26,77,017 நபர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதே போன்று அரசின் சிறப்பான சிகிச்சையால் இதுவரை 1,96,483 நபர்கள் கொரோனா தொற்றிலிருந்து பூரணகுணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதேபோன்று இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அதிகளவு கொரோனா பரிசோதனை மையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காய்ச்சல், இருமல், சளி, போன்ற அறிகுறி உடையவர்கள் ஆரம்ப நிலையிலேயே அரசு மருத்துவமனைக்கு வந்து விட்டால் நுரையீரல் பாதிக்கப்படாமல் உடனடியாக சிகிச்சை அளித்து குணப்படுத்த முடியும். தாமதமாக வரும் பொழுது நுரையீரல் பாதிப்பு ஏற்பட்டு குணப்படுத்த கடினமாகிறது. எனவே கொரோனா தென்பட்டால் பொது மக்கள் உடனடியாக அரசு மருத்துவமனையை அணுகி சிகிச்சை பெற்று கொள்ள வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் மரு.மரிய லூயிஸ் பெக்கி ஹோம்ஸ், துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மரு.கலைவாணி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**